**இந்தியத் துணைத் தூதரகம்**

**யாழ்ப்பாணம்**

**<u>ஊடக அறிக்கை</u>**

*யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் 216,000 ரூபாய் நிதி அன்பளிப்புடன் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியினர் நடாத்திய வள்ளுவர் விழா இன்று (19 மார்ச் 2019) கல்லூரி வளாகத்தில் சிறப்பாக இடம்பெற்றது. காலை 10.30 க்கு ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வுகள் மதியம் 1.30 மணியுடன் நிறைவுற்றது.*

*கல்லூரி அதிபர் திரு பொன்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் பாலச்சந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் லலீசன் மற்றும் அவரது குழுவினர் முல்லைத்தீவு கல்வி பணிப்பாளர் உமாநிதி புவனேஸ்வராஜா மற்றும் அயற் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளிட்ட 1000ற்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.*

*திருவள்ளுவரின் திருவுருவச் சிலைக்கு யாழ் இந்தியத் துணைத் தூதுவர் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தி நிகழ்வினை தொடக்கி வைத்தார். மாணவர்களினால் திருக்குறளையும் அதன் சிறப்புக்களையும் எடுத்துக் காட்டும் வகையிலும் திருவள்ளுவரின் பெருமையினைக் கூறும் வகையிலும் பல்வேறு சிறப்புப் பேச்சுக்கள், கவிதைகள், இசை நடன நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டதுடன் யாழ்ப்பாணம் தமிழ் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்புப் பட்டிமன்றமும் இடம் பெற்றது.*

*விழாவுடன் தொடர்புடைய புகைப்படங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.*

***

**Consulate General of India**
**Jaffna**
****

## PRESS RELEASE

A "Thirukural Day" was celebrated on March 19, 2019 at Vidyananda College, Mullaitivu with a financial assistance of LKR 2.16 lakh granted by Government of India.

2. On the occasion, the Consul General inaugurated the "Day" with the garlanding of the Thiruvalluvar statue located on the College premises. He also delivered a special address. Speakers and students of the College extolled the virtues contained in Thirukural. The programme of the day included a debate in Tamil on Thirukural conducted by Jaffna Tamil Sangam, dance performances, a poem recital and distribution of prizes to students who had won competitions related to Thirukural.

3. Over 1000 students and faculty members participated in the event.

4. Representative photos are enclosed.

****

March 19, 2019.